செ.வெ.எண்: 44/2013 **பத்திரிக்கை செய்தி** நாள்: 29.10.2013

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும் பணிகளை செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள, பணித்தளப் பொறுப்பாளர்களுக்கு 6நாள் பயிற்சி அளிக்க இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், உத்திரவிட்டதைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உள்ள 13 ஊராட்சிகளில் பணியாற்றும் பணித்தளப்பொறுப்பாளர்களுக்கு, 28.10.2013 முதல் 08.11.2013 முடிய 6 நாள் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாநில ஊரக பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணியாற்றும் உதவித் திட்ட அலுவலர், உதவி செயற்பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், உதவிப்பொறியாளர்கள் மற்றும் ஒன்றிய பணி மேற்பார்வையாளர்களால் பணித்தளப் பொறுப்பாளர்களுக்கு, இப்பயிற்சி வழங்கப்படுகிறது.

6 நாள் பயிற்சியில் முதல் நாள் ஊராட்சி ஒன்றியத்தில் தலைமையிடத்தில் வகுப்பறை பயிற்சியும், மீதமுள்ள 2 நாட்களில், ஊராட்சிகளில் களப்பயிற்சியும் வழங்கப்படுகிறது. பணித்தளப் பொறுப்பாளர்களுக்கு தினசரி வருகைப்பதிவேட்டில் வருகைப் பதிவு செய்வது, வேலை அடையாள அட்டையில் வருகை, மற்றும் கூலித்தொகை வழங்கியவற்றை பதிவு செய்வது, பணித்தளத்தில் வருகை தந்துள்ள வேலை ஆட்களை 20 பேர் கொண்ட குழுவாக பிரித்து, முன் அளவீடுகள் செய்து கொடுத்து பணியாற்றும் ஒவ்வொருவரும் கூலித்தொகை ரூ.148/—ஐ பெற எவ்வாறு பணிகள் செய்யவேண்டும் , மாற்றுத் திறனாளிகளுக்கு என்ன வகையான பணிகள் வழங்கப்பட வேண்டும் போன்ற விவரங்கள் பயிற்சியின் போது கற்றுத்தரப்படுகிறது.

பயிற்சிகாலத்தின் மூன்று நாட்களுக்கும் பணித்தளப் பொறுப்பாளர்களுக்கு உணவு, ஊதியத்தொகை, பயிற்சி கையேடு மற்றும் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. எனவே, அரசு வழங்கும் இப்பயிற்சியை பயன்படுத்திக்கொண்டு பயனடைய உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்ட பணித்தளப் பொறுப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)

உதகமண்டலம்.

E:\Mgnregs-2\Press Report\806-2013